**இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கம் - 2015**

---

இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவக் குழுவின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவக் குழு பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை றக்பி கால்ப்பந்தாட்ட சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்களிற்காக நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 500,000 தொகையான பணிக்கொடை செலவினங்களின் கணிப்பீட்டு முறையானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததனால் அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.3 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

விளையாட்டுச் சங்கங்களின் பொறுப்பாளர்களிற்கான தேர்தலிற்காக தேசிய சம்மேளமொன்றில் ஒரு தடவை பதவி வகித்த நபரொருவரை நியமிப்பதனை தடுப்பதற்கான கட்டளையை பெற்றுக்கொள்வதற்காக சங்கத்தின் பதவியணி உறுப்பினரொருவரால் உச்ச நீதிமன்றத்தில் தனிப்பட்ட பெயரில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கிற்காக ரூபா 1,450,000 சட்டக் கட்டணங்கள் சங்கத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,482,636 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 47,311,516 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 52,794,152 ஆன வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. விளையாட்டுப் போட்டிகளின் நேரடிச் செலவினங்கள் ரூபா 57,425,892 ஆல் அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பிரதேச மட்டத்தில் இலங்கையில் றக்பியின் முன்னேற்றத்திற்காக சர்வதேச றக்பி சங்கத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,950,000 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிதியேற்பாடுகளில், ரூபா 4,690,500 தொகை அல்லது 59 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தலிற்கு தேவையான அளவீடுகள் காணப்படாதமையானது அதற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2016 நவம்பர் 02 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் சங்கத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | செலவினங்களிற்காக நிதியேற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | நிதிகள் உரிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |